# தடுப்பூசி போட்டுக் கொள்ள தாமதிக்காதீர்கள்!

**PREVENT**
GLOBAL
HPV CANCERS

**இன்றே உங்கள் மகளுக்கு தடுப்பூசி செலுத்துங்கள். வருங்கால கருப்பைவாய் புற்று நோயிலிருந்து அவளை பாதுகாப்பீர்.**



கருப்பைவாய் புற்றுநோய் முக்கியமாக ஹெச் பி வி எனும் கிருமித்தொற்று காரணமாய் ஏற்ப்படுகிறது.. ஹெச் பி வி கிருமித்தொற்று பரவலாக ஏற்படுகிறது. **கிட்டத்தட்ட அனைவரும்** தங்களது வாழ்நாளில் ஹெச் பி வி தொற்றால் பாதிக்கப்படுகிறார்கள். ஹெச் பி வி தடுப்பூசி கருப்பைவாய் புற்றுநோய்க்கு காரணமான ஹெச் பி வி தொற்றிலிருந்து பாதுகாக்கிறது.

## வயதின் முக்கியத்துவம்

புரிந்துரைக்கப்பட்ட வயதுகளில் போடப்படும் தடுப்பூசி வயதான பின் போடப்படும் தடுப்பூசியைக் காட்டிலும் புற்றுநோய்களில் இருந்து வலிமையான பாதுகாப்பை அளிக்கும

**சரியான வயது** வயது **9 - 14**



**தாமதமான / கூடுதல் தவணை** **15** வயதிற்கு மேல்



**9-14 வயதிற்குள்** உள்ள பெண் குழ்ந்தைகள் எதிகாலத்தில் கருப்பைவாய் புற்று நோய் மற்றும் ஹெச் பி வி தொற்றினால் ஏற்படும் மற்ற புற்று நோய்களில் இருந்தும் த்ங்களை பாதுகாக்கத்துக்கொள்ள ஹெச் பி வி தடுப்பூசியை கொள்ள மருத்துவர்கள் பரிந்துரைக்கின்றனர்.

## இன்றே முன் பதிவிற்கு பதிவு செய்யுங்கள்!

14 வயதில் கொடுக்கப்படும். தடுப்பூசியால் கருப்பைவாய் புற்றுநோய் உள்ளிட்ட அநேக ஹெச்.பி.வி புற்றுநோய்களில் இருந்தும் அவளை பாதுகாக்கலாம்.

**தடுப்பூசி செலுத்திய தேதி:** ___________________________

# கேள்விகளும் பதில்களும்:

PREVENT GLOBAL HPV CANCERS

## ஏன் 9-14 வயதில் தடுப்பூசி செலுத்த வேண்டும்?

9-14வயதிற்குள் பெண் குழ்ந்தைகளுக்கு ஹெச் பி வி தடுப்பூசி செலுத்தும் போது தொற்றுநோயைத் தடுக்கும் எதிர்ப்பு சக்தி மிக வலிமையாக இருக்கும். காலம் கடந்து செலுத்தப்படும் தடுப்பூசியைவிட குறிப்பிட்ட வயதிற்குள் செலுத்தப்படும் தடுப்பூசி ஹெச் பி வி புற்றுநோயிலிருந்து சிறந்த பாதுகாப்பளிக்கும் என ஆய்வுகள் கூறுகின்றன.

## எனது மகளுக்கு 14 வயது கடந்து விட்டது. நான் என்ன செய்ய வேண்டும்?

ஒரு பெண்ணின் 15 வது பிறந்த நாளுக்கு முன் கொடுக்கப்படும் ஹெச் பி வி தடுப்பூசி சிறப்பாக வேலை செய்யும். எனினும  பிந்தைய வயதுகளில் செலுத்தப்படும் தடுப்பூசியும் ஓரளவு வேலை செய்யும். கூடுதலாக ஒரு தவணை தடுப்பூசி தேவைப்பட்டாலும் 15 வயது மற்றும் அதற்து மேற்பட்ட வயதுடையோர் தடுப்பூசி எடுத்துக் கொள்வது பாதுகாப்பு அளிக்கும்.

## தடுப்பூசிக்கு பக்க விளைவுகள் உள்ளனவா?

ஹெச் பி வி தடுப்பூசி மிக பாதுகாப்பானது. ஊசி மூலம் செலுத்தப்படும் மற்ற தடுப்பு மருந்துகள் போல பொதுவான மற்றும் மிதமான பக்க விளைவுகள் ஹெச் பி வி தடுப்புசிக்கும் உண்டு.  காய்ச்சல்,  தலைவலி,  தடுப்பூசி குத்திய கையில் வலி மற்றும் சிவப்புத்தன்மை. ஆகியவை ஏற்படக்கூடும்.  அரிதாக தடுப்பூசி போட்ட பிறகு குழந்தைகளுக்கு மயக்கம் வரலாம்.அவ்வாறு மயங்கி விழும் சமயம் காயமேற்படலாம். இதை தவிர்க்க தடுப்பூசி செலுத்திய பின்  15 நிமிடங்கள் உங்கள் குழந்தை அமர்ந்து இருக்க அற்வுறுத்தலாம்.

**தடுப்பூசி மருந்தின் விலை மற்றும் கிடைக்குமிடம் பற்றித் தெரிந்து கொள்ள அருகில் உள்ள வெளி நோயாளிகள் சிகிச்சை மையம் அல்லது மருத்துவமனையை தொடர்பு கொள்ளுங்கள்.**

உலகளாவிய HPV புற்றுநோய்களைத் தடுப்பது என்பது அமெரிக்கன் கேன்சர் சொசைட்டியின் குளோபல் HPV புற்றுநோய் இலவச திட்டத்தால் ஆதரிக்கப்படும் ஒரு கூட்டு முயற்சியாகும்.
கடைசி திருத்தம் Feb 2024